17.10.2022 S.C.No.138/2017 P.W.4 – Mushtari Tazeen

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு, பிரமாணம் செய்யப்பட்டு, தொடர் குறுக்கு விசாரணைக்கு அனுமதிக்கப்படுகிறார்.

குறுக்கு விசாரணை தொடர்ச்சி

19.06.2015 அன்று மாலை 4.30 மணிக்கு பிறகு நான், என் கணவரை எப்போது பார்த்தேன் என்று சொன்னால் அன்றைய தினம் நான் என் கணவரை பார்த்தேன். ஆனால் நேரம் ஞாபகம் இல்லை. என் கணவரை பார்த்தபிறகு நான் அன்றைய தினம் மருத்துவமனையிலேயே தான் இருந்தேன். நான் எங்கும் செல்லவில்லை. 20.06.2015 அன்று காலை நான் எங்கு சென்றேன் என்றால் நான் எங்கும் போகவில்லை. மருத்துவமனையில் தான் இருந்தேன். 20.06.2015 அன்று இரவு வரை மருத்துவமனையில் தான் இருந்தேன். மருந்து என் மாமனார் வாங்கி வந்தார். சாப்பாடும் என் மாமனார் தான் வாங்கி வந்தார். 20.06.2015 அன்று காலையில் மருத்துவர் வந்தாரா என்றால் வந்தார் என்று சாட்சி சொல்லிவிட்டு திரும்பவும் தனக்கு ஞாபகம் இல்லை என்று கூறுகிறார். மருத்துவர் என்னை என்ன கேட்டார் என்றால் என்னை எதுவும் கேட்கவில்லை. எனக்கு தமிழ் வராது என்பதால் நான் எதுவும் பேசவில்லை. அங்கிருந்த நர்சிடமும் எதுவும் கேட்கவில்லை. வார்டுபாயிடம், மருத்துவர் எதுவும் கேட்டாரா என்றால் எனக்கு தெரியாது. மருத்துவருடன் எத்தனை பேர் வந்தார்கள் என்பது எனக்கு தெரியாது. 19.06.2015 அன்று நான், என் கணவரை பார்த்துவிட்டு வீட்டிற்கு சென்றுவிட்டேன் என்றாலும், எனவே 20.06.2015 அன்று என்ன நடந்தது என்பது எனக்கு தெரியாது என்றாலும் சரியல்ல. 20.06.2015 அன்று மருத்துவர் காலையில் ரௌண்ட்ஸ் வரும்போது நான் அங்கில்லை என்றாலும், எனவே மருத்துவர் யாரை என்ன கேட்டார் என்பது எனக்கு தெரியாது என்றாலும், ஆனால் நான் 20.06.2015 அன்று காலை மருத்துவமனையில் இருந்ததாக பொய் சாட்சி அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. 20.06.2015 அன்று மருத்துவர் ரௌண்ட்ஸ் வரும்போது என் அப்பா என்னுடன் இருந்தாரா என்றால் தற்போது ஞாபகம் இல்லை.

20.06.2015 அன்று என் அப்பா, என் கணவருடன் இருந்தார் என்று சொன்னால் இல்லை. 20.06.2015 அன்று என் கணவர் மருத்துவமனையில் தான் இருந்தார். என் கணவர் 20.06.2015 அன்று மருத்துவமனையில் இல்லை என்றாலும், என் கணவரை, என் அப்பா அடிப்பதற்காக மருத்துவமனையில் இருந்து கூட்டி சென்றுவிட்டார் என்றால் சரியல்ல. என் கணவர் 20.06.2015 அன்று காலையில் மருத்துவர் வரும்போது மருத்துவமனையில் தான் இருந்தார் என்ற விவரத்தை நான் CBCID போலிசாரிடம் சொன்னேனா என்றால் சொல்லியிருப்பேன். CBCID போலிசார் தவிர என்னை, இந்த வழக்கு சம்மந்தமாக நீதிபதியும் விசாரித்தார். அவரிடமும் என் கணவர் 20.06.2015 அன்று காலை மருத்துவர் வரும்போது மருத்துவமனையில் இருந்ததாக சொல்லி உள்ளேன். 20.06.2015 அன்று என் அப்பா எங்கிருந்தார் என்று தெரியுமா என்றால் என் அப்பா மருத்துவமனைக்கு வந்து சென்றார், அதுதவிர ஆட்டோ தான் ஓட்டிக்கொண்டு இருப்பார். என்னுடைய அப்பா 20.06.2015 அன்று எந்த நேரத்தில் மருத்துவமனைக்கு வந்தார் என்றால் அவர் அன்றைய தினம் வந்து, வந்து போய்க் கொண்டு இருந்தார். எனவே அவர் வந்த நேரம் எனக்கு ஞாபகம் இல்லை. எவ்வளவு முறை வந்து போனார் என்பது எனக்கு ஞாபகம் இல்லை. என்னுடைய அப்பா 20.06.2015 அன்று மருத்துவமனைக்கு வரவே இல்லை என்றாலும், ஆனால் நான் வந்து சென்றதாக பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நீதிபதியிடம் என் கணவரை யார் யார் அடித்ததாக சொல்லி உள்ளேன் என்றால் மார்ட்டின் பிரேம்ராஜ்–ம் அவருடன் இருந்த போலிசாரும் அடித்ததாக சொல்லியிருக்கிறேன். மற்ற போலிசார் பெயர் தெரியாததால் நான் சொல்லவில்லை. நான் காவல் நிலையத்திற்கு 18.06.2015 அன்று சென்றேன். 18.06.2015 அன்று நான் காவல் நிலையத்திற்கு சென்றபோது அங்கு எந்த காவல் உதவி ஆய்வாளர் இருந்தார் என்றால் என் அப்பா தான் காவல் நிலையத்திற்கு சென்றார். நான் வெளியே நின்றுக்கொண்டேன். எனவே எந்த காவல் உதவி ஆய்வாளர் இருந்தார் என்று எனக்கு தெரியாது. 18.06.2015 அன்று காவல் நிலையத்தில் எந்த காவல் உதவி ஆய்வாளர் இருந்தார் என்பதை நான் நீதிபதியிடம்

சொல்லவில்லை. என் கணவர் இறந்து எவ்வளவு நாட்கள் கழித்து என்னை நீதிபதி விசாரித்தார் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. உண்மையில் என் கணவருக்கு என்ன என்ன காயங்கள் இருந்தது என்பது தெரியாமல் யாரோ சொல்லிக் கொடுத்ததை வைத்து நான் நீதிபதியிடம் அப்படியே சொல்லி உள்ளேன் என்றால் சரியல்ல. பிரேத பரிசோதனை அறிக்கை வந்தபிறகு அதை தெரிந்துக்கொண்டு இவ்வாறு இருக்குமோ என்று சந்தேகப்பட்டு, நான் நீதிபதியிடம் சாட்சியம் அளித்தேன் என்றால் சரியல்ல. 19.06.2015 அன்று மாலை தான் நான் மருத்துவமனைக்கு சென்றேன். 21.06.2015 வரை நான் மருத்துவமனையிலேயே தான் இருந்தேன். வெளியே எங்கும் செல்லவில்லை. நான் உண்மையிலேயே மருத்துவமனையில் இருந்திருந்தேன் என்றால் என் கணவர் மருத்துவமனையில் இருந்து காணாமல் போன விவரம் எனக்கு தெரிந்திருக்கும் என்றாலும், என் கணவரை என் அப்பா வெளியே கூட்டிச்சென்று அடித்த விவரம் தெரிந்துக்கொண்டு என் அப்பாவை காப்பாற்றுவதற்காக தற்போது பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என் கணவருக்கு என்ன நடந்தது என்பது முழுவதும் தெரியாமலேயே நான் பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகள் யாரும், என் கணவரை அடிக்கவில்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

N VASANTHALEELA

Digitally signed by N VASANTHALEELA